**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 75/2021 |
| Name | : Amarnath |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூரில் வசிக்கிறேன். கதர் கடையில் மேலாளராக உள்ளேன். 5 வருடங்களுக்கு முன்பு 2021ம் ஆண்டு மார்ச் மாதம் தேதி சரியாக தெரியவில்லை இரவு 08.30-09.00 மணிக்குள் ஜோத்தம்பட்டி ஜோதி கோவில் அருகில் நான் உடுமலையில் இருந்து எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது எனக்கு முன்னால் சென்ற Cheverolet கார் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தது அப்போது Activa இருசக்கர வாகனத்தை நந்தகுமார் என்பவது அப்பா கதிரேசன் கிழக்கிலிருந்து மேற்காக ஓட்டி வந்தார். கார் இடது புறம் திரும்புவதற்காக வலது நன்றாக ஏறி வந்ததாலும், முகப்பு விளக்கு அதிக வெளிச்சமாக இருந்ததாலும் வேகமாக போனதாலும் எதிரே வந்தவர் வண்டியை நிறுத்திவிட்டார் கார் அவர் மீது அடித்து தூக்கி வீசி அவர் அருகில் உள்ள வாய்க்காலில் விழுந்துவிட்டார். ஆஜர் எதிரி தான் அன்று காரை ஓட்டி வந்தார். அவரை நான் அன்று பார்த்தேன். நான் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னேன். அவருக்கு இடுப்பு, இரண்டு கால் மற்றும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரது மகன் நந்தகுமாருக்கு போன் செய்து சொன்னேன். அவரை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்றார்கள். மருத்துவமனைக்கு சென்ற போது அவர் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) மறு நாள் காலை காவல் நிலையத்திற்கு சென்ற போது என்னை விசாரித்தார்கள். நந்தகுமார் எனது நீண்ட கால குடும்ப நண்பர். காருக்கு சுமார் 150–200 மீட்டர் பின்னால் சென்று கொண்டிருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதி S போன்ற வளைவு உள்ள பகுதி என்றால் சரியல்ல. நான் சென்று பார்த்த போது விபத்து ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். கார் வலது புறம் ஏறிச் சென்றதாகவும், காயம்பட்டவர் வாய்க்காலில் விழுந்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன். யாருடைய கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சரியாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல நான் காருக்கு பின்னாலேயே தான் சென்றேன்.

(2) காரின் எந்த பகுதி இருசக்கர வாகனத்தின் மீது மோதியது என்றால் வலது புறம் மோதியது. ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். கிழமேல் ரோட்டின் விபத்து குறிப்பாக எந்த இடத்தில் நடந்தது என்றால் சாலையில் தென்புறம் நடந்தது. தென்புறம் ஓரமாக நடந்ததா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் ரத்தக் கறை, வாகனங்களின் உடைந்த பாகங்கள் மற்றும் சக்கர அச்சு இருந்ததா என்றால் இருந்தது. நான் என்ன வாகனத்தில் சென்றேன் என்று போலீஸில் சொன்னேனா என்றால் இல்லை. வாகனங்களின் எந்த பகுதியில் சேதம் ஏற்பட்டிருந்தது தெரியுமா என்றால் தெரியும். இருசக்கர வாகனத்தின் எந்த பக்கம் சேதம் ஏற்பட்டிருந்தது என்றால் வாகனம் முழுவதும் சேதம் ஏற்பட்டிருந்தது. விபத்தில் அடிபட்ட நபர் S பெண்டில் இருந்து வந்து கண்ட்ரோல் செய்ய முடியாமல் எதிரி வாகனத்தின் மீது மோதி அவராக விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும் அதனால் தான் வாகனத்திற்கு crush injury ஏற்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

(3) நான் பின்னால் சென்று கொண்டிருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், நான் அங்கு இல்லை என்றும், விபத்து ஏற்பட்ட பின்பு அருகில் இருந்தவர்கள் எதிரியை காவல் நிலையம் செல்லுமாறு சொல்லிவிட்டார்கள் தற்போது போலீசார் சொல்லிக் கொடுத்த படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

உண்மையிலேயே சம்பவ இடத்தில் இல்லாததால் ஆம்புலன்ஸில் உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் வண்டியுடனே ரோட்டில் கீழே கிடந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையின் வாகனங்களின் எண் சொல்லவில்லை என்றால் சரியல்ல அப்போது சொன்னேன். போலீசார் என்னை சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

(4)சம்பவம் நடந்ததாக சொல்லும் ரோடு சிங்கிள் ரோடு என்றால் சரிதான். இறந்து போன நபர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் அது பற்றி தெரியாது. இறந்து போன நபருக்கு நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று கொடுக்கப்பட்ட பொய்யான புகாரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடிபட்ட நபர் எனது நெருங்கிய நண்பரின் அப்பா என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:47:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்